No. of Printed Pages : 7

**9175**

பதிவு எண் | | | | | | | |

# பகுதி — III— சிறப்புத் தமிழ்

# Part - III - ADVANCED LANGUAGE - TAMIL

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** முற்றுருவகப் பாங்கில் அமைந்து தெளிவானதோர் அகக்காட்சியைத் தருவது __________.

(அ) படிமம் (ஆ) சிலேடை (இ) உருவகம் (ஈ) இருண்மை

**2.** பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (1) | பாடுக என்றதும் பாடுவோன் | (i) | சித்திரகவி |
| (2) | அலங்காரத்தோடும் ஓசையோடும் பாடுவோன் | (ii) | வித்தாரகவி |
| (3) | ஓவியத்தை அடிப்படையாகக் கொண்டு பாடுவோன் | (iii) | மதுரகவி |
| (4) | விரிவாகப் பாடுவோன் | (iv) | ஆசுகவி |

(அ) (1)-(iv), (2)-(iii), (3)-(i), (4)-(ii)

(ஆ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)

(இ) (1)-(iii), (2)-(i), (3)-(iv), (4)-(ii)

(ஈ) (1)-(ii), (2)-(i), (3)-(iii), (4)-(iv)

[ திருப்புக

3. 1999 ஆம் ஆண்டு ஆலாபனை என்ற நூலுக்குச் சாகித்திய அகாதெமி பரிசு பெற்றவர் :

(அ) சிற்பி (ஆ) மு. மேத்தா

(இ) இன்குலாப் (ஈ) அப்துல் ரகுமான்

4. தொடக்ககாலத்தில் சிறுகதைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த இதழ் :

(அ) மணிக்கொடி (ஆ) வானம்பாடி

(இ) எழுத்து (ஈ) கசடதபற

5. இவர்களில் யார் ஆண் எழுத்தாளர் இல்லை ?

(அ) அம்பை (ஆ) யூமா வாசுகி (இ) சுஜாதா (ஈ) பூமணி

6. விளக்கம் கண்டு விடை எழுதுக.

'மரபான கதை சொல்லலில் நவீனப்
புனைகதையின் வடிவத்தை இணைத்துக்
குறுகிய வடிவில் எழுதப்படும் கதை' ................

(அ) குறுங்கதை (ஆ) புனைகதை (இ) குறும்புதினம் (ஈ) சிறுகதை

7. நாடகத்தின் அடிப்படை அலகு :

(அ) காட்சி (ஆ) களம் (இ) உரையாடல் (ஈ) அங்கம்

8. பாலாமணி ஸ்பெசல் என்று அழைக்கப்பட்டது :

(அ) புராண நாடகம் (ஆ) பெண்கள் நாடகம்

(இ) ஸ்பெசல் நாடகம் (ஈ) தொடர்வண்டி

9. பொருந்தாத இணையைக் கண்டறிக.

(அ) கலைவாணர் - என்.எஸ். கிருஷ்ணன்

(ஆ) தமிழ்த்தென்றல் - திரு.வி.க

(இ) கெட்டிஸ்பார்க் - விவேகானந்தர்

(ஈ) பேரறிஞர் - அண்ணா

**10.** தொல்காப்பியம் கற்பதற்கு முன்னர், பயிற்சி பெற வேண்டிய நூல் __________.

(அ) இலக்கண விளக்கம் (ஆ) நன்னூல்

(இ) வீரசோழியம் (ஈ) நேமிநாதம்

**11.** நிகண்டு என்பதன் பொருளைத் தராத சொல் __________.

(அ) தமிழ்ப்பா அகராதி (ஆ) தொகுப்பு அகராதி

(இ) இணைய அகராதி (ஈ) தொகையகராதி

**12.** சிலம்பரசன் அரசுப் பள்ளியில் படிக்கிறான். அவன் தம்பியும் அதே பள்ளியில் படிக்கிறான். இத்தொடரமைப்பு __________.

(அ) சுட்டுப்பெயர் + இயற்பெயர் (ஆ) இயற்பெயர் + இயற்பெயர்

(இ) சுட்டுப்பெயர் + சுட்டுப்பெயர் (ஈ) இயற்பெயர் + சுட்டுப்பெயர்

**13.** கீழ்க்காணும் இதழ்களுள் விடுதலைப் போராட்ட காலத்தில் வெளிவராதது எது ?

(அ) இந்தியா (ஆ) சுதேசமித்திரன்

(இ) அரும்பு (ஈ) தேசபக்தன்

**14.** 'ஜகன்மோகினி' இதழின் ஆசிரியர் :

(அ) ஏ.என். சிவராமன் (ஆ) வை.மு. கோதைநாயகி

(இ) சி.பா. ஆதித்தனார் (ஈ) ஜி. கஸ்தூரி

**15.** பொருத்துக.

| | **உள்ளடக்கம்** | | **இதழின் பெயர்** |
|---|---|---|---|
| (1) | கல்வி வளர்ச்சி | (i) | சம்பத் கௌமுதி |
| (2) | மருத்துவம் | (ii) | கலைக்கதிர் |
| (3) | பெண் உரிமைகள் | (iii) | மூலிகை மணி |
| (4) | அறிவியல் | (iv) | ஜனவிநோதினி |

(அ) (1)-(iv), (2)-(iii), (3)-(i), (4)-(ii) (ஆ) (1)-(i), (2)-(iii), (3)-(iv), (4)-(ii)

(இ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii) (ஈ) (1)-(ii), (2)-(iv), (3)-(iii), (4)-(i)

16. **கூற்று** : தலையங்கம் ஓர் இதழின் கருத்துக் கண்ணாடி ஆகும்.

**காரணம்** : அன்றைய நாளிதழின் செய்திகளைத் தொகுத்து வழங்குகிறது.

(அ) **கூற்று, காரணம்** இரண்டும் தவறு

(ஆ) **கூற்று** சரி, **காரணம்** தவறு

(இ) **கூற்று** தவறு, **காரணம்** சரி

(ஈ) **கூற்று, காரணம்** இரண்டும் சரி

17. இந்தியாவில் முதன் முதலாக அச்சில் ஏறிய மொழி என்று இதனைச் சொல்வர் __________.

(அ) வடமொழி (ஆ) கன்னடம் (இ) தெலுங்கு (ஈ) தமிழ்

18. கையெழுத்தை மின்வரிகளாக மாற்றித் தரும் செயலி :

(அ) சொற்செயலி (ஆ) விசைப்பலகை

(இ) பேச்சுரை மாற்றி (ஈ) கையெழுத்து உணரி

19. 'எழுத்துரு' என்ற கலைச்சொல்லுக்கு இணையான ஆங்கிலச் சொல் எது ?

(அ) Font (ஆ) Word (இ) Write (ஈ) Text

20. பெண்களுக்காக பெண்களே நடத்தும் இதழ் :

(அ) ஊடறு (ஆ) சொல்வனம்

(இ) வல்லமை (ஈ) முத்துக்கமலம்

## பகுதி - II

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

21. சிற்றிலக்கிய வகைகளுள் எவையேனும் நான்கனை எழுதுக.

22. படிமம் – வரையறு.

23. காட்சித் துணுக்கு முறை என்பது யாது ?

24. பிளாஸ்டிக் யானையின் தோற்றத்தைச் சார்வாகன் எவ்வாறு விவரிக்கிறார் ?

25. தெருக்கூத்து என்றால் என்ன ?

26. சி.வை. தாமோதரனார் பதிப்பித்த நூல்கள் யாவை ?

27. ஒரு மொழிக்கு இலக்கணம் ஏன் தேவை ?

28. தொடரில் வேற்றுமையுருபுகள் அடுக்கி வருவதற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

29. தலைகீழ்க் கூம்புத் தலைப்பு என்பது யாது ?

30. காட்சியை எவ்வாறு வரையறை செய்வாய் ?

## பகுதி - III

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40 -க்கு** **கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

31. புதுக்கவிதையில் குறியீடு – குறிப்பு வரைக.

32. சுந்தரகவிராயர் கண்ட புதுமையான காட்சியைப் பற்றி எழுதுக.

33. முதல் தலைமுறை சிறுகதை ஆசிரியர்களாக அறியப்படுபவர்கள் யாவர் ?

34. சோமநாதன் அமைத்த பூந்தோட்டம் பற்றி எழுதுக.

35. சங்கரதாச சுவாமிகள் – குறிப்பு வரைக.

[ திருப்புக

36. சொற்பிழை திருத்தி, இலக்கணப்பிழை திருத்தி ஆகியவை நமக்கு எவ்வகையில் உதவுகின்றன ?

37. நாம் பேசும்போது, இயல்பாகவே ஆகுபெயரைப் பயன்படுத்துகிறோம் என்பதனை நடைமுறை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

38. கலைக்களஞ்சியம் என்றால் என்ன ? விளக்குக.

39. நாளிதழ்கள் மக்களை விரைவாகச் சென்றடைய ஜி. கஸ்தூரி பயன்படுத்திய உத்திகள் மூன்றினை எழுதுக.

40. படச்சட்ட அரங்கம் – குறிப்பு வரைக.

## பகுதி - IV

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

41. (அ) லிமரிக், லிமரைக்கூ – வேறுபடுத்துக.

**அல்லது**

(ஆ) புதுக்கவிதை வளர்ச்சி பெறுவதற்கு உதவிய இதழ்கள் குறித்து விவரித்து எழுதுக.

42. (அ) ‘கண்ணுள் மணியை’ – பாடல் வழியாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**அல்லது**

(ஆ) சிறுகதையின் வடிவம் குறித்து எழுதுக.

43. (அ) ‘இறுகமூடிய கதவுகள்’ கதையில் வரும் அம்மாவின் தியாகத்தையும், ‘பூ உதிரும்’ கதையில் வரும் கௌரி என்னும் அம்மாவின் தியாகத்தையும் உன் பார்வையில் மதிப்பிடுக.

**அல்லது**

(ஆ) நாடகத்தில் அங்கங்களை எவ்வாறு முடிவு செய்வாய் ?

**44.** (அ) பம்மல் சம்பந்தனாரின் நாடகப் பணிகள் குறித்து விளக்குக.

**அல்லது**

(ஆ) பேச்சுக்கலை ஆளுமைகளுள் எவரேனும் ஒருவரைக் குறித்து நீங்கள் அறிந்ததை எழுதுக.

**45.** (அ) சொல் நிலையிலும், தொடர் நிலையிலும் சொற்கள் அடுக்கி வருவதனை நடைமுறை எடுத்துக்காட்டுகளோடு விளக்குக.

**அல்லது**

(ஆ) கணினித்துறையில் அகராதியின் பங்கு குறித்து எழுதுக.

**46.** (அ) செய்தித்தாளின் மூன்று வகை பக்க அமைப்புகளை விளக்குக.

**அல்லது**

(ஆ) 'இதழ்களுடன் ஒரு சந்திப்பு' பகுதியிலிருந்து இதழ்கள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**47.** (அ) இணையத்தில் தமிழ் இடம்பெற்ற விதத்தினை விவரி.

**அல்லது**

(ஆ) இடைமுகச் செயலிகளின் பட்டியலைத் தருக.

**- o O o -**